Deposition of Witness

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop .164/2022

ம.சா.1 செல்வகுமார்

| | |
|---|---|
| Name | : செல்வகுமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 12.03.2024 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ளது என் கையெழுத்து தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. 17322ம் தேதி புளியங்குடி அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் Referral Sheet ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என்.04.ஏபி.0146 என்ற வாகனத்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. மேற்படி லாரியின் பெர்மிட் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5. மேற்படி லாரியின் தகுதி சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ6. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ7. டி.என்.72.என்.1658 என்ற அரசு பேரூந்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ8. மேற்படி அரசு பேரூந்தின் தகுதிசான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ9. 4ம்எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ10. குற்ற வழக்கின் மாதிரிவரைபடம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ11. என்னுடைய ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ12. என்னுடைய நிரந்தர ஊனத்தை காட்டக்கூடிய Disability

ID Card ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ13. நான் திரவியம் மருத்துவமனையில் 17.3.22 முதல் 28.3.22 வரை சிகிச்சை பெற்றதற்கு வழங்கிய விடுவிப்பு சான்று அசல் ம.சா.ஆ14. மேற்படி மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கு செலுத்திய கட்டணம் ரூ.1,40,219/-க்குரியது அசல் ம.சா.ஆ15. நான் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கியதற்கு செலுத்திய பில்கள் எண்ணம் 40 அசல் ரூ.69,800/-க்குரியது ம.சா.ஆ16. ரூ.5700/-க்குரிய ஆம்புலன்ஸ் பில் எண்ணம் 1 அசல் ம.சா.ஆ17. நான் ரத்தம் வாங்கியதற்கு செலுத்திய கட்டண ரசீதுகள் எண்ணம் 2 அசல் ரூ.2000/-த்திற்குரியது ம.சா.ஆ18. மருத்துவரின் பரிந்துரை சீட்டுகள் அசல் ம.சா.ஆ19.

(ம.சா.ஆ15, ம.சா.ஆ16 ஆவணங்கள் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)